# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் ஸ்பெயினிலுள்ள பைத்துர் ரஹ்மான் பள்ளிவாயிலில்

## 05.04.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா ஆலி இம்ரானின் 104, 105 மற்றும் சூரா அந்நஹ்லின் 126 ஆகிய வசனங்களை ஓதினார்கள்:**

وَاعْتَصِمُوا بِحَبْلِ اللهِ جَمِيعًا وَلَا تَفَرَّقُوا وَاذْكُرُوا نِعْمَتَ
اللهِ عَلَيْكُمْ إِذْ كُنْتُمْ أَعْدَاءً فَأَلَّفَ بَيْنَ قُلُوبِكُمْ فَأَصْبَحْتُمْ
بِنِعْمَتِهِ إِخْوَانًا وَكُنْتُمْ عَلَى شَفَا حُفْرَةٍ مِنَ النَّارِ فَأَنْقَذَكُمْ
مِنْهَا كَذَلِكَ يُبَيِّنُ اللهُ لَكُمْ آيَاتِهِ لَعَلَّكُمْ تَهْتَدُونَ
وَلْتَكُنْ مِنْكُمْ أُمَّةٌ يَدْعُونَ إِلَى الْخَيْرِ وَيَأْمُرُونَ بِالْمَعْرُوفِ
وَيَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَأُولَئِكَ هُمُ الْمُفْلِحُونَ

*பொருள் : நீங்கள் யாவரும் ஒன்றுபட்டு அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். மேலும் நீங்கள் பிரிந்துபோய் விடாதீர்கள். உங்கள் மீது (செய்து)ள்ள அல்லாஹ்வின் அருளை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் எதிரிகளாயிருந்தீர்கள். பின்னர் உங்கள் உள்ளங்களில் நட்பை உண்டாக்கினான். எனவே நீங்கள் அவனது அருளினால் உடன்பிறப்பு போல் ஆகி விட்டீர்கள். நீங்கள் ஒரு நெருப்புக் கிடங்கின் ஓரத்தில் இருந்தீர்கள். பின்னர் அவன் உங்களை அதிலிருந்து காப்பாற்றினான். இவ்வாறே அல்லாஹ் உங்களுக்குத் தன் வசனங்களை நீங்கள் நேர்வழியினைப் பெறும் பொருட்டு விளக்குகின்றான்.*

*மக்களை நன்மையின் பக்கம் அழைக்கவும், நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேணடும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:104,105)*

அடுத்து அதிகாரம் அந்நஹ்ல் உடைய வசனமாகும்.

اُدْعُ إِلَى سَبِيلِ رَبِّكَ بِالْحِكْمَةِ وَالْمَوْعِظَةِ الْحَسَنَةِ وَجَادِلْهُمْ بِالَّتِي
هِيَ أَحْسَنُ إِنَّ رَبَّكَ هُوَ أَعْلَمُ بِمَنْ ضَلَّ عَنْ سَبِيلِهِ وَهُوَ أَعْلَمُ
بِالْمُهْتَدِينَ

*பொருள் : உமது இறைவனின் வழியில் நனிளமாகவும், சிறந்த அறிவுரைகளுடனும் அழைப்பீராக! மேலும் அவர்களுடன் சிறந்த ஆதாரங்களுடன் கருத்துப்பரிமாற்றம் செய்வீராக! அவனுடைய வழியிலிருந்து தவறியவர்களையும், நேரான வழியில் இருப்பவர்களையும் நிச்சயமாக உம்முடைய இறைவன் நன்கு அறிகின்றான். (16:126)*

கடந்த ஜுமுஆவில், இறை அருளால் ஸ்பெயினில் இரண்டாவது பள்ளிவாசல் திறக்கப்பட்டது. முழு ஜமாஅத்தும் மகிழ்ச்சி அடைந்தார்கள். மேலும் மகிழ்ச்சியாகவே உள்ளனர். கடந்த வாரம் இது தொடர்பாக நான் சில விசயங்களை எடுத்துரைத்தேன். இது தொடர்பாக நான், இன்றும் சில விசயங்களின் பால் கவனமூட்ட விரும்புகின்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் கூட கூறியிருக்கிறார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: தற்போது பள்ளிவாசல்கள் கட்டுவது நமது ஜமாஅத்திற்கு மிகவும் அவசியமாக உள்ளது. இது இறை இல்லமாகும். எந்தக் கிராமத்தில், எந்த நகரத்தில் நமது ஜமாஅத்

பள்ளிவாசல் கட்டப்பட்டு விட்டதோ அங்கு ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு விட்டது என்பதை புரிந்து கொள்ளுங்கள். மேலும் முஸ்லிம்கள் குறைவாக உள்ள அல்லது முஸ்லிம்களே இல்லாத ஏதாவது கிரமமோ, நகரமோ இருந்து அங்கு இஸ்லாம் முன்னேற வேண்டும் என்றால் அங்கு ஒரு பள்ளிவாசலைக் கட்ட வேண்டும். பிறகு இறைவனே முஸ்லிம்களை இழுத்துக் கொண்டு வருவான். ஆனால் பள்ளிவாசல் கட்டுவதில் நிய்யத் தூய்மையாக இருக்க வேண்டும் என்பது இதன் நிபந்தனையாகும். இறைவனுக்காக அது கட்டப்பட வேண்டும். உள் நோக்கங்கள் அல்லது வேறு எவ்வித தீய எண்ணமும் இருத்தல் கூடாது. அப்போதுதான் இறைவன் அருளை வழங்குவான். நான் இந்த மேற்கோளை முன்பும் பலமுறை எடுத்துரைத்துள்ளேன். ஆனால் இதில் கூறப்பட்டுள்ளவை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததென்றால், ஒவ்வொரு அஹ்மதியும் இதனை மீண்டும் மீண்டும் கண்முன் நிறுத்த வேண்டும். இறை இல்லம் என்பதுதான் முதல் விசயமாகும். இறை இல்லத்திற்காக நினைவில் கொள்ள வேண்டியவற்றின் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். இறைவன் இருக்கின்றான் என்ற நம்பிக்கை இருந்தால், இறை அருளால் ஒவ்வொரு அஹ்மதியும் இறைவன் இருக்கின்றான் என நம்பிக்கை கொண்டுள்ளனர். எனவே அவனது இல்லத்திற்கு கண்ணியம் அளிப்பதன் பக்கம், மரியாதை செலுத்துவதன் பக்கம், அதனை நிரப்புவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இறைவனுக்காக அவனது வீட்டை நிரப்புவதன் பக்கம் கவனம் இருக்கும் போது இபாதத்துகளுடன் இறை அடியார்களின் உரிமைகளை செலுத்துவதன் பக்கமும் கவனம் ஏற்படும். பரஸ்பரம் பாச நேசத்துடன் வாழ்வதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

இவற்றின் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஜமாஅத்தினர் அனைவரும் இணைந்து இந்த பள்ளிவாசலில் ஜமாஅத்தாக தொழ வேண்டும்.

ஜமாஅத் மற்றும் ஒற்றுமையில் மாபெரும் அருள் உள்ளது. வேற்றுமையின் மூலம் பிளவு ஏற்படுகிறது. மேலும் தற்போது ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை வளர்க்க வேண்டும். அதற்குரிய நேரம் இதுவாகும். சின்னச் சின்ன விசயங்களைக் கண்டும் காணாமல் விட்டு விட வேண்டும். அது பிளவுக்குக் காரணமாக அமையும். ஆக, இறை இல்லம் தொடர்பாக நினைவில் வைக்க வேண்டிய முதல் விசயம், இறை இல்லம் ஆகும். இதில், இப்பகுதியில் இருக்கக்கூடிய ஒவ்வொரு அஹ்மதியும் ஜமாஅத்தாக தொழுவதன் பக்கம் கவனம் செலுத்தி இதற்குரிய உரிமையை நிறைவேற்ற வேண்டும். ஜமாஅத்தாக தொழுவது, நாம் அன்பு, நேசம் மற்றும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதன் பக்கம் கவனமூட்டக்கூடியதாக இருக்க வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: தற்போது ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை வளர்க்க வேண்டும். அதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

இதை இன்றிலிருந்து ஏறக்குறைய 108 வருடங்களுக்கு முன்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபாக்களின் தர்பிய்யத் உடனுக்குடன் நடைபெற்று வந்தது. மேலும் அவர்களுடைய இறையச்சத்தின் தரம், எந்த அளவு இருந்ததென்றால் அது இன்றை விட மிகவும் உயர்வானதாக இருந்தது. அவர்களிடம் இறையச்சம் அதிகமாக இருந்தது. அவர்களிடம் தொழுகைகளின் பக்கம் அதிக கவனம் இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் இறைவனுடன் குறிப்பான தொடர்பைக் கொண்டவர்களாக இருந்தார்கள். ஆனால் நபியுடைய பணி இறையச்சத்தின் அனைத்து நுட்பமானவற்றையும் தன்னை ஏற்றுக் கொண்டவர்களுக்கு முன்பு வைத்து, அவர்களை உயர்ந்த அந்தஸ்தின் பக்கம் வழிநடத்தி வருவதேயாகும். அதனால் அன்னார் அனைத்து சாத்தியமான வழிகளையும் திறந்து வைத்து தன்னை ஏற்றுக் கொண்டவர்களுக்கு முன்பு எடுத்துக் கூறினார்கள்; இதன் பக்கம் அதிகமாக கவனம் செலுத்தினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு கவலை இருந்தது. இது ஆரம்ப காலகட்டமாகும். இதில் தக்வாவின் தரம் உயரவில்லை என்றால், பிறகு வரக்கூடியவர்களுக்கு முன்பு தக்வாவின் உயர் தரத்தை அடைவதற்கு முயற்சி செய்வதற்கு முன்னுதாரணம் இல்லாமல் போய் விடும்.

நான், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபாக்களின் சம்பவங்கள் பற்றி எடுத்துக் கூறும் தொடரை ஆரம்பித்திருந்தேன். அதில் பலவிதமான விசயங்கள் விடுபட்டு விட்டன. ஏனென்றால் அனைத்து

சஹாபாக்களின் சம்பவங்களும் நம் முன் வரவில்லை. மேலும் வந்ததென்றால் அவை மிகவும் குறைவாக மற்றும் சுருக்கமானதாகவே இருந்தன. ஆனால் நம் முன் வந்த சம்பவங்கள் சஹாபாக்களுக்காக துஆ செய்வதன் பக்கம் கவனமூட்டக்கூடியவையாக இருந்தன. மேலும் அந்த சஹாபாக்களின் சந்ததிகள் இங்கு ஸ்பெயிலும் சிலர் இருக்கலாம். அவர்கள் குறிப்பாக தமது மூதாதையர்களுக்காக துஆ செய்வதன் பக்கமும் அவர்களின் முன்னுதாரத்தின்படி செயல்படுவதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும்.

நாம் இங்கு, இந்த நாட்டில் எண்ணற்ற பணிகளைச் செய்ய வேண்டும். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தொலைத்த மகிமையை மீண்டும் நிலைநாட்ட வேணடும். இங்கு வாழக்கூடிய மக்களுக்கு மீண்டும் இஸ்லாமிய மார்க்கத்தின் சிறப்புகளை எடுத்துரைத்து, அவர்களை நபி (ஸல்) அவர்களுடைய கொடியின் கீழ் கொண்டு வர வேண்டும். இதனை செய்ய மிகவும் முக்கியமான விசயம், அல்லாஹ்வுடைய இபாதத்திற்குரிய உரிமையைச் செலுத்துவது, அவனிடம் உதவி வேண்டுவது, மேலும் ஒன்றுபட்டு தப்லீக் பணியைச் செய்வது போன்றதாகும். ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலகட்டம் மட்டும் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கு முக்கியத்துவம் வழுங்கக்கூடிய காலம் கிடையாது. மாறாக இன்றும் கூட நாம் இந்த நாட்டை இஸ்லாத்தின் கொடியின் கீழ் கொண்டு வருவோம் என்ற மிகப்பெரிய வாதம் செய்து கொண்டிருக்கின்றோம்.

அனைத்தையும் விட முதலில் தமக்குள் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கு முன்னேற்றம் வழங்குவது மற்றும் அதற்குரிய சிறந்த தரத்தை நிலைநாட்டுவது அவசியமாகும். அனைத்து பொறுப்பாளர்களும் ஜமாஅத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் ஒன்றுபடுவதில் தமது பங்கை வகிக்கவில்லையென்றால், பிறகு பள்ளிவாசல் மற்றும் இறை இல்லம் ஆகியவற்றிற்குரிய உரிமையை செலுத்தக்கூடியவர்களாக ஆக முடியாது. நான் முன்னதாகவும் கூறியிருக்கின்றேன். ஆன்மாவின் அழகு வெளிப்படும்போதுதான் பயன் அளிக்கும். ஒவ்வொரு அஹ்மதியுடைய சொல்லிலும், செயலிலும் இபாதத்துடன் அன்பையும், ஒருவருக்கொருவர் நேசத்தின் உணர்வையும் வெளிப்படுத்த வேண்டும். இந்த விசயத்தை திருக்குர்ஆனும் நமக்கு முன்பு தெளிவுபடுத்தியுள்ளது. நான் ஆரம்பத்தில் ஓதிய வசனங்களில் அல்லாஹ் கூறுகின்றான்: அதன் மொழியாக்கத்தையும் நீங்கள் கேட்டீர்கள். பரஸ்பரம் அன்பையும் நேசத்தையும் ஏற்படுத்துங்கள். அவ்வாறு ஏற்படுத்தவில்லையென்றால் அது வழிகேடாகும். இது அல்லாஹ்வின் மாபெரும் அருளும், கருணையும் ஆகும். அவன் உங்களை ஒன்றுசேர்த்துள்ளான்.

ஆக, இறைவனுடைய ஒவ்வொரு கூற்றையும், ஒவ்வொரு கட்டளையையும், ஒவ்வொரு வழிகாட்டலையும் பற்றி ஓர் உண்மையான மூஃமின் சிந்திக்க வேண்டும். இந்த கட்டளைகளிலிருந்து நானும் விலகியவன் அல்லன். நீங்களும் விலகியவர்கள் அல்லர். எந்தவொரு பொறுப்பாளரும் விலகியவர்கள் அல்லர். எந்தவொரு முபல்லிக்கும், முரப்பியும் விலகியவர்கள் அல்லர். அதேபோன்று எந்தவொரு உறுப்பினரும் அவர் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் விலகியவர்கள் அல்லர். நாம் அல்லாஹ்வின் கட்டளையை உறுதியாகப் பற்றிப் பிடித்திருக்கும் வரை, நாம் திருக்குர்ஆனின் போதனைகளின்படி செயல்படுபவர்களாக இருக்கும் வரை, அல்லாஹ்வின் இந்தக் கருணையை நினைவில் கொள்ளும் வரை, அதாவது அவன் நாம் அஹ்மதி ஆவதற்கும் அஹ்மதிய்யத்தில் நிலைத்திருப்பதற்கும் வாய்ப்பளித்துள்ளான் என்பதை நாம் நினைவில் வைத்திருக்கும் வரை நாம் அல்லாஹ்விற்குரிய உரிமையைச் செலுத்துபவர்களாவோம். அவனுடைய வீட்டிற்குரிய உரிமையைச் செலுத்துபவர்களாக ஆவோம். நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) மற்றும் அன்னாரது உண்மை நேசர், காலத்தின் இமாமின் கூற்றுக்களை உறுதியாக பின்பற்றும் வரை நாம் அல்லாஹ்வின் அருளுக்குரிய உரிமையைச் செலுத்தக் கூடியவர்களாகவும் அவனது கருணை மற்றும் அருள்களுக்கு நன்றிசெலுத்துபவர்களாகவும் ஆவோம். நம்மில் ஒவ்வொருவரும் காலத்தின் கலீஃபாவுடன் செய்யும் பைஅத் உடன்படிக்கையின்படி கலீஃபாவின் கூற்றுக்களை கேட்பது மட்டுமல்லாமல், அதன்படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறு செய்பவர் அல்லாஹ்வின் அருள்களுக்கு கண்ணியம் அளிக்கக்கூடியவராக கருதப்படுவார்.

**ஆக, எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்! திருக்குர்ஆன், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்), ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மற்றும் அஹ்மதிய்யா கிலாஃபத் இவை அனைத்தும் ஹப்லுல்லாஹ் ஆகும். அல்லாஹ்வின் கயிறு ஆகும்.** ஒருவேளை அவற்றில் ஒரு கன்னியை ஓர் அஹ்மதி விடுவார் என்றால், அவர் மீண்டும் நெருப்புக் கிடங்கின் பக்கம் செல்லக்கூடிய மக்களைச் சேர்ந்தவராகி விடுவார். எனவே ஒவ்வொரு அஹ்மதியும் இந்த விசயத்தை கண்முன் நிறுத்த வேண்டும். அல்லாஹ்வின் கயற்றைப் பிடித்திருப்பது, அவனது

அருள்களை நினைவில் கொள்வது, அவனுக்கு நன்றி செலுத்துபவர்களாக இருப்பது போன்றவை உண்மையிலேயே இருக்கும் போதுதான் சொற்கள் செயல்களாக உருவம் பெறும். பரஸ்பரம் அன்பு ஏற்படும். ஒருவர் மற்றவருடன் அன்பு செலுத்தக்கூடிய சகோதரர் போன்று ஆகி விடுவார்கள். அப்போது தான் ஓர் அஹ்மதி உண்மையில் நேர்வழி பெற்றவர் மற்றும் நெருப்பின் கிடங்கில் விழுவதிலிருந்து காப்பாற்றப்பட்டவர் ஆவார் என அழைக்கப்படுவார்.

எல்லாவிதமான பிளவுகளிலிருந்து தன்னை தூய்மையாக வைத்துக் கொள்ளும் போதுதான் ஓர் அஹ்மதி உண்மையான அஹ்மதி என அழைக்கப்படுவார். ஒவ்வொரு தற்பெருமையிலிருந்து ஒவ்வொரு அஹ்மதியும் தன்னை பாதுகாத்துக் கொள்ளும்போதுதான், இறைவனது விருப்பத்தைப் பெறுவதற்காக பரஸ்பரம் அன்பு ஏற்படும்போதுதான் ஓர் அஹ்மதி உண்மையான அஹ்மதியாவார்.

எனவே இந்த வழியில் தமது சிந்தனையைச் செலுத்தக் கூடியவர்கள் நற்பேறு பெற்றவர்கள் ஆவர். உங்களது சொல்லை இவ்வாறு அமையுங்கள். உங்களது செயலை இவ்வாறு ஆக்குங்கள். இந்த தரத்தை நாம் அடையும் போது தான் நாம் மற்றவர்களையும் அழைக்க முடியும். மக்களே! வாருங்கள். இறைவனின் ஒளியை இங்கு பாருங்கள் என உரக்க கூற முடியும்.

இன்று சந்தேகமின்றி ஒரு பெரிய கூட்டம் மார்க்கத்திலிருந்து விலகியுள்ளது. உலகில் ஒரு பெரிய எண்ணிக்கை மார்க்கத்திலிருந்து விலகியிருக்கிறது. மேலும் இதனை விட அதிகமாக இறை இருப்பை மறுக்கக் கூடியவர்கள் உள்ளனர். குறிப்பாக மேற்கத்திய நாடுகளில் உள்ளனர். ஆனால் ஸ்பெயின் எப்படிப்பட்ட நாடு என்றால் இங்கு இப்போதும் கூட ஒரு கணிசமான எண்ணிக்கையில் மார்க்கத்தின் பக்கம் ஆர்வம் கொண்டவர்கள் இருக்கிறார்கள். இங்கு இரண்டு நாட்களுக்கு முன்பு ஸ்பேனிஷ் மக்களுடன் Reception (வரவேற்பு நிகழச்சி) நடத்தப்பட்டது. என்னுடன் வேலன்ஸியா பாராளுமன்றத்தின் தலைவர் அமர்ந்திருந்தார். அவர் பேசும் போது மிகவும் கவலையுடன் மக்கள் இப்போது மார்க்கத்தை விட்டு விலகிச் செல்கிறார்கள். நாம் அவர்களை மார்க்கத்தின் பால் கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும் எனக் கூறினார். பொதுவாக இந்த தரத்தில் உள்ள மக்கள் மார்க்கத்தை விட்டு விலகியவர்களாக, உலகவாதிகளாக இருப்பார்கள். மேற்கத்திய நாடுகளில் நான் பழகிய வரை மக்கள் அவ்வாறே இருக்கிறார்கள். ஆனால் இங்கு மார்க்கத்தின் பக்கம் ஆர்வம் கொண்ட மக்களையும் பார்க்கின்றோம்.

ஆக, இந்த சிந்தனை இப்படிப்பட்ட மக்களிடமும் உள்ளது. உண்மையான மார்க்கம் இஸ்லாம் என்று இறைவன் தெளிவாக கூறிவிட்டான். எனவே வேறெந்த மார்க்கத்திலும் மனிதனை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்ல முடியாது. மேலும் அதற்குரிய ஆற்றலும் அந்த மார்க்கங்களுக்கு இல்லை. தற்போது இஸ்லாம் மார்க்கம் மட்டுமே மனிதனை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்லக்கூடிய ஆற்றல் கொண்டது. ஆனால் இஸ்லாத்தைப் பரப்புவதற்கு யார் மீதெல்லாம் பொறுப்பு உள்ளதோ, மேலும் யார் மீது கருணை காட்டியவாறு இறைவன் ஹப்லுல்லாஹ்வை கொடுத்திருக்கின்றானோ அவர்கள் அஹ்மதிகள் ஆவர். ஆக, நமது சொல்லிலும் செயலிலும் முரண்பாடு இருந்தால், நாம் சின்ன விசயத்தில் கருத்து வேறுபாடு கொண்டோம் என்றால், நமது ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கக்கூடியதாக அந்த கருத்து வேறுபாடு இருந்தால், நம்மீது சுமத்தப்பட்ட பொறுப்புகளைச் செய்வதற்கும், சிறந்த விளைவுகளை உண்டாக்குவதில் தடையாக இருந்தால் நிச்சயமாக நாம் இறைவனுக்கு முன்பு பதில் கூற வேண்டும்.

நான் கடந்த குத்பாவிலும் கூறியது போன்று சில நூற்றாண்டுகளுக்கு முன்பு இஸ்லாத்தை அடிப்படையாகக் கொண்ட ஆயிரக்கணக்கான ஸ்பெயினியர்கள் உள்ளனர். அவர்களில் ஆயிரக்கணக்கான மக்கள் மீண்டும் இஸ்லாத்தில் நுழைந்தார்கள். நுழைந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு உண்மையான இஸ்லாத்தைப் பற்றி தெரியாது. உண்மையான இஸ்லாத்தைப் பற்றி நாம் தான் அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். ஐரோப்பா மற்றும் பல மேற்கத்திய நாடுகளில், அங்குள்ள உள்ளூர்வாசிகள், ஆன்மீகத் தேடலினால் முஸ்லிம் ஆனார்கள். அவர்களின் தலைவர்களும் அல்லது ஆலிம்களும் அவர்கள் தேடிவந்த ஆன்மீக தரத்தைக் காண வழியினைக் காட்டவில்லை. இதனால் அவர்களிடம் மேலும் தேடுவதற்கான ஆர்வம் உண்டானது. பிறகு அது அவர்களை அஹ்மதிய்யத்தின் பக்கம் கொண்டு வந்தது.

இது ஒவ்வொரு அஹ்மதியும் கவனம் செலுத்த வேண்டிய விசயமாகும். புதிதாக வரக்கூடியவர்களுக்கு அஹ்மதிய்யத்தின் மடியில் ஆன்மீக நிம்மதி கிடைக்கிறது. மேலும் இதற்காக பழைய அஹ்மதிகள் தம் மீது கவனம் செலுத்த வேண்டும். பழைய அஹ்மதிகள் குறிப்பாக வெளிநாடுகளில் வசிக்கக்கூடிய பாகிஸ்தான் அஹ்மதிகள் தமது பொறுப்புகளை நிறைவேற்றவில்லையென்றால் பிறகு உண்மையை தேடக்கூடிய இவர்கள் மார்க்கத்திலிருந்து தூரம் விலகிச் செல்லக் கூடியவர்களாக ஆகி விடுவார்கள். எனவே ஒவ்வொரு அஹ்மதியும் தத்தமது பொறுப்புகளை உணர வேண்டும்.

வரவேற்பு நிகழ்ச்சி பற்றி நான் கூறினேன். அதில் நான் இஸ்லாமிய போதனைகளின் மூலம் சுருக்கமாக பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தேன். ஒரு பெண்மணி, உணவிற்குப் பிறகு என்னை சந்திக்க வந்தார். அவர் ஸ்பேனிஷ் ஆக எனக்கு தெரிந்தார். அவர் என்னிடம் நான் முஸ்லிம் என்று கூறினர். அதற்கு நான் நீங்கள் முகபாவணையில் ஸ்பேனிஷ் ஆக தோன்றுகிறீர்கள் என்றேன். நான் ஒரு முஸ்லிம் அமைப்பின் பொறுப்பாளர் ஆவேன் என்றார். அவர் என்னிடம், நீங்கள் இஸ்லாத்தின் அழகிய போதனையை மிகவும் அழகிய முறையில் எடுத்துரைத்தீர்கள். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது என்றார். நான் அவரிடம், நீங்கள் ஸ்பேனிஷ் ஆக தெரிகின்றீர்கள் என்று கூறிய போது, கண்ணியத்திற்குரிய கரம் இலாஹி சாஹிப் முன்னாள் முபல்லிக் இன்சார்ஜ் உடைய மகன் எனது அருகில் நின்றிருந்தார். அவர் இவர்கள் ஸ்பேனிஷியர் தான். இப்போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளார் என்றார். அவர் கன்வெர்ட் என்ற வார்த்தையை உபயோகப்படுத்தினார். அப்போது அந்தப் பெண்மணி இல்லை. நான் கன்வர்ட் ஆகவில்லை. நான் எனது மூதாதையர்களின் மார்க்கத்திற்குத் திரும்பி வந்திருக்கிறேன் என்றார். இப்படிப்பட்ட மக்கள் பலர் உள்ளனர். அவர்களுக்கு தமது மூதாதையர்களின் மார்க்கம், தமது அடிப்படை மற்றும் தமது வேர்களைப் பற்றிய தேடல் இருக்கின்றது. நாம் இப்படிப்பட்ட பகுதியில் இப்படிப்பட்ட மக்களிடத்தில் மிகவும் கடின உழைப்புடன் செயல்பட வேண்டிய அவசியம் உள்ளது.

நான் மீண்டும் மீண்டும் கூறுகின்றேன். இந்தப் பணியில் அருள் கிடைக்க வேண்டும் என்றால் நாம் நமது நிலையை இறைவனது கட்டளைகளுக்கேற்ப அமைத்துக் கொள்ள வேண்டும். உண்மையான இஸ்லாத்தின் தேடலின் தாகத்தை நம்மால்தான் தீர்க்க முடியும். ஓர் அஹ்மதியால் தான் தீர்க்க முடியும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இஸ்லாத்தின் முன்னேற்றத்தின் அடித்தளம் பள்ளிவாசல் கட்டுவதைச் சார்ந்திருக்கிறது எனக் கூறியுள்ளார்கள். அதனுடன் இந்த நிபந்தனையும் வைத்துள்ளார்கள். பள்ளிவாசல் கட்டுவதில் தூய எண்ணம் இருக்க வேண்டும். அப்போது தான் பயனடைய முடியும் என்று கூறினார்கள். பள்ளிவாசல் கட்டுவதில் பள்ளிவாசலை நிரப்பும் மக்களின் பரிசுத்ததன்மை தான் பயனளிக்கும். எந்த விதமான சூழ்ச்சியும், தந்திரமும், எந்தவிதமான அறிவும் பயனளிக்காது. இந்த அம்சங்களும் கூடவே இருந்தாலும் தூய்மை தான் முதன்மையானதும் அடிப்படையானதும் ஆகும். இறை விருப்பத்தைப் பெறுவது தான் முதன்மையானதும் அடிப்படையானதும் ஆகும். சுயநலம் மற்றும் தற்பெருமையில் இருந்து அப்பாற்பட்டு சிந்தித்தால் பிறகு பெட்ரோபாதிலுள்ள பசாரத் பள்ளிவாசலின் அருள்களும் வேலன்ஷியாவில் உள்ள பைத்துர் ரஹ்மான் பள்ளிவாசலுடைய சிறந்த விளைவுகளையும் நாம் பார்ப்போம் இன்சா அல்லாஹுத்தஆலா.

இந்த பள்ளிவாசலின் திறப்பு விழாவின் வரவேற்பு நிகழ்ச்சியும் நடைபெற்றது. இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் வரவேற்பு நிகழ்ச்சியை ஸ்பெயின் ஜமாஅத் முதன்முறையாக நடத்தியுள்ளது. இதில் அண்டை அயலாரைத் தவிர கல்வி அறிவு படைத்த அரசாங்க அதிகாரிகள், அரசியல்வாதிகளும் வந்தனர். எல்லா விதமான மக்களும் இருந்தனர். நல்லதொரு தாக்கத்திற்கு ஆளாகிச் சென்றனர். இஸ்லாத்தின் அழகிய போதனையை இன்று முதன்முறையாக கேட்கின்றோம் என்று பலர் கூறினர். சிலர் நாங்கள் உணர்ச்சிவசப்பட்டுக் கொண்டிருந்தோம் என்றனர். இறை இருப்பை மறுக்கக்கூடிய நாஸ்திகர்களும் எங்களுக்கு மதத்தைப் பற்றி பல விசயங்கள் தெரிய வந்துள்ளது என்றனர். டாக்டர் மன்சூர் சாஹிப் அவர்கள் எனக்கு நன்கு தெரிந்த ஒரு மருத்துவர் இன்று மிகவும் உணர்ச்சிவசப்பட்டுக் கொண்டிருந்தார் என்று கூறினார்கள். இன்று இறை இருப்பின் மீது நம்பிக்கை மற்றும் மார்க்கத்தின் அழகைப் பற்றி யாராவது கூற முடியும் என்றால் அது அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டும்தான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களால்தான், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஜமாஅத்தில் உள்ளவர்களால் தான் முடியும். இவர்களுக்கு அல்லாஹ் ஹப்லுல்லாஹ்வை பிடிப்பதற்கான ஏற்பாட்டை செய்திருக்கின்றான்.

பிறகு நீங்கள் இதனை நிகழ்ச்சிகளிலும் பார்க்கலாம். ரிப்போர்ட்களிலும் வெளிவரும். M.T.A வும் நேர்காணலையும், விருந்தில் வந்த பல்வேறு மக்கள் பள்ளிவாசல் தொடர்பாக இஸ்லாம் தொடர்பாக கூறிய கருத்துக்களையும் பதிவு செய்துள்ளது. நான் கூறியது போன்று அதில் வேலன்ஷியா உடைய சபாநாயகரும் வந்திருந்தார். அவர் மேட்ரிட் சென்றிருந்தார் என நினைக்கிறேன். இது எவ்வளவு தூரம் என்று இங்கு வசிக்கக் கூடியவர்களுக்கு தெரியும். இங்கிருந்து இரயிலில் பயணம் செய்வதாக இருந்தாலும் ஏறக்குறைய 2 மணி நேரம் ஆகி விடும். எனவே அவர் வருவதற்கு நேரமாகி விட்டது. அவரது பணியாளர் அவர் வரமாட்டார் எனக் கூறினார். ஆனால் நிகழ்ச்சிக்கு ஒரு மணி நேரம் முன்பாகவே இரயில் நிலையம் வந்திருந்தார். பிறகு தனது ஓட்டுனரிடம் நேராக பள்ளிவாசலுக்குச் செல் என்றார். அவர் ஏதோ அரசாங்க வேலை விசயமாக சென்றிருந்தார். அவர் என்னிடம், மதியம் வெளிவுறவுத் துறை அமைச்சருடன் சந்திப்பு இருந்தது. அங்கு சென்று விட்டு வந்துள்ளேன் என்றார். இருந்த போதிலும் அவர் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து நேராக பள்ளிவாசலுக்கு வந்து விட்டார். ஆரம்பத்தில் ஒரு அரை மணி நேரம் உட்கார்ந்து விட்டு சென்று விடலாம் என எண்ணியிருந்தார். பிறகு முழுமையாக உட்கார்ந்தார். ஆர்வமாக உரையைக் கேட்டார். மிகவும் அழகிய முறையில் இஸ்லாத்தின் போதனையை எடுத்துரைத்தீர்கள் என்றார்.

இதனைப் போன்று பலரும் இங்கு வந்திருந்தனர். அரசியல்வாதிகளும், மருத்துவர்களும், வக்கீல்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் வந்திருந்தனர். அனைவரும் சிறந்த தாக்கத்திற்கு ஆளானார்கள். நான் கூறியது போன்று இது ஸ்பெயின் ஜமாஅத் மிகப்பெரிய அளவில் நடத்திய முதல் நிகழ்ச்சியாகும். இதில் ஏறக்குறைய 108 ஸ்பேனிஷியர்கள் வந்திருந்தனர். ஆரம்பத்தில் பள்ளிவாசல் கட்டுவதற்கு எதிராக இருந்த அண்டை அயலார்களில் பலரும் வந்திருந்தனர். அவர்களில் சிலருக்கு ஏதாவது சந்தேகம் இருந்தது என்றால் அவற்றில் சிலவற்றை அவர்கள் வெளிப்படுத்தினர். அவை எனது சொற்பொழிவுக்குப் பிறகு விலகி விட்டது. நான் அண்டை அயலாரின் உரிமைகள், இஸ்லாத்தில் அதன் முக்கியத்துவம் என்பதிலிருந்து தான் சொற்பொழிவைத் துவக்கினேன். எவ்வாறாயினும் தற்போது உலகிற்கு இதன் பக்கம் கவனம் உள்ளது. இந்த பள்ளிவாசல் கட்டப்பட்ட பிறகு, இதனைப் பற்றி செய்தித்தாள்களில் செய்தி வெளி வந்த பிறகு மேலும் கவனம் ஏற்படும். நாம் நமது பணியைச் செய்ய வேண்டும். இந்தப் பொறுப்பை உணர வேண்டிய அவசியம் உள்ளது.

நான் ஓதிய வசனங்களில் இரண்டாவது வசனம் ஆலி இம்ரானின் வசனம் ஆகும். அல்லாஹ் முதல் வசனத்தில் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டின் பக்கம் கவனமூட்டியிருந்தான். அதன் மூலம் நேர்வழியில் நிலைபெற்றிருக்க வேண்டும். வழிகேட்டிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். மேலும் அல்லாஹ்வின் அருள்களிலிருந்து பயன்பெற்றுக் கொண்டே செல்ல வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது.

இரண்டாவது வசனத்தில், உங்களில் ஒரு ஜமாஅத் நன்மையின் பக்கம் அழைக்கக் கூடியதாக இருக்க வேண்டும் எனக் கூறியுள்ளான். எனவே ஒரு ஜமாஅத் நன்மையின் பக்கம் அழைக்கக் கூடிய, நன்மையைப் போதித்து தீமையிலிருந்து தடுக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இது முதலில் முபல்லிக் மற்றும் முரப்பிகளுடைய ஜமாஅத் ஆகும். அவர்கள் தான் இதில் முதலில் சுட்டிக் காட்டப்பட்டவர்கள் ஆவர். ஏனென்றால் முரப்பிகளை காலத்தின் கலீஃபா அவர்கள், தப்லீகிற்காகவும், தர்பிய்யத்திற்காகவும், தனது பிரதிநிதியாக இங்கும், உலகெங்கும் அனுப்பி இருக்கிறார்கள். நீங்கள் அறிவுரை கூறக்கூடியவர்கள் ஆவீர்கள். இரட்சிப்பு வேண்டுமென்றால் ஹப்லுல்லாஹ்வைப் பற்றிப் பிடியுங்கள் என்று உலகிற்கு எடுத்துரைக்கின்றீர்கள். இம்மையையும் மறுமையையும் சீர் செய்ய விரும்புகின்றீர்கள் என்றால், அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகியவற்றைப் பரப்புங்கள் என்று கூறக்கூடியவர்கள் ஆவீர்கள்.

முரப்பிகளும், முபல்லிக்குகளும் உயர்ந்த நல்லொழுக்கத்தை நிலைநாட்டவில்லை என்றால் பிறகு உலகிற்கு எவ்வாறு அறிவுரை கூறுவீர்கள்? முரப்பிகளுடைய பணி, ஜமாஅத்திற்கு தர்பிய்யத் செய்வதும், தப்லீக் செய்வதும் ஆகும். எனவே, இரண்டு பணிகளையும் செய்வதற்கு உயர்ந்த மன உறுதியை வெளிப்படுத்துவது அவசியமாகும். பொறுமையின் உயர் தரத்தை நிலைநாட்டுவது அவசியமாகும். கட்டுப்படுதலின் உயர் தரத்தை நிலைநாட்டுவதும், நிலைநாட்ட வைப்பதும் மிகவும் அவசியமாகும். சொல்லும் செயலும் ஒன்றுபட்டிருப்பது மிகவும் அவசியமாகும். நான் கூறியது போன்று முரப்பிகள் ஜமாஅத்தின் மார்க்க, ஆன்மீக முன்னேற்றத்திற்காக

நியமிக்கப்பட்ட காலத்தின் கலீஃபாவின் பிரதிநிதி ஆவார்கள். எனவே இந்த பிரதிநிதிக்குரிய உரிமையைச் செலுத்த முயற்சி செய்யுங்கள். கடினமான காலகட்டங்கள் வரும். சில மக்களின் சில பொறுப்பாளர்களின் நடவடிக்கைகள் உங்களை கஷ்டப்படுத்தும். சில சமயங்களில் பொறுமையைக் கையாள்வது கடினமாகி விடும். முபல்லிக்கும் மனிதன் தானே! ஆனால் உடனே துஆ மற்றும் இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். இறைவனுக்காக நாம் நமது வாழ்வை அர்ப்பணித்திருக்கின்றோம். நாம் ஜமாஅத் தர்பிய்யத்தின் உயர் நல்லொழுக்கத்தையும் நிலைநாட்ட வேண்டும். சீர்கெட்ட உலகினை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் கொண்டு வர வேண்டும் என்ற சிந்தனையை கண்முன் கொண்டு வர வேண்டும். இந்த சிந்தனை இருந்தால் யாருடைய கூற்றும் நோக்கத்தினை அடைவதிலிருந்தும் நோக்கத்தினை அடையும் முயற்சியிலிருந்தும் தடுக்க முடியாது.

*அல் இஸ்ஸத்து லில்லாஹ் (4:140)* அல்லாஹ்வுகே எல்லா கண்ணியமும் உண்டு என்பதை எப்போதும் கண்முன் நிறுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் நீங்கள் வாழ்வை அர்ப்பணிக்கின்றீர்கள் என்று செய்த வாக்குறுதி எப்போதும் உங்கள் கண்முன் நிற்கும். அல்லாஹ்வுடைய கண்ணியமும் மகத்துவமும் மட்டுமே உங்கள் முன் இருக்கும். உங்களுடைய சுய கண்ணியமும் மகத்துவமும் இருக்காது. பொறுப்பாளர்களின் தவறான நடவடிக்கைகளின் போது அதை பொறுத்துக் கொள்வது இறைவனது விருப்பத்தைப் பெற்றுத் தரக்கூடியதாக இருக்கும். ஏனென்றால் எல்லா விதமான சூழ்நிலையிலும், நீங்கள் நன்மையை ஏவக்கூடிய பணியைச் செய்பவர் ஆவீர்கள். எனவே முரப்பிகளுடைய பணி தன்னை மட்டும் பிரிவுகளிலிருந்து விலக்கி, நெருப்பின் கிடங்கிலிருந்து பாதுகாப்பாக இருப்பது கிடையாது. மாறாக உலகத்தையும் பிரிவுகளிலிருந்து காப்பாற்ற வேண்டும். நெருப்பின் கிடங்கிலிருந்து தூரம் விலக்க வேண்டும். நான் கூறியது போன்று இந்தப் பணி, தியாகம் இல்லாமல் நடைபெறாது.

பிறகு இரண்டாவதாக, இந்த வசனத்தின் கீழ் வருபவர்கள் ஜமாஅத்திற்கு சேவை செய்வதற்காக தன்னைத் தானே அர்ப்பணித்த பொறுப்பாளர்கள் ஆவார்கள். ஜமாஅத் பொறுப்பாளர்களிடமும் ஓர் அமானிதம் உள்ளது. அந்த அமானிதத்தின் உரிமையைச் செலுத்தாதவர்கள் அல்லாஹ்வின் பிடியில் வர நேரிடும். அல்லாஹ் திருக்குர்ஆனில் மிகத் தெளிவாகக்கூறியிருக்கின்றான். நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள். அமானிதத்தின் உரிமை சொல்லிலும் செயலிலும் ஒற்றுமையை ஏற்படுத்தும் போதுதான் நிறைவேறும். பொறுப்பு வெறும் பொறுப்பு வகிப்பதற்காக மட்டும் இருக்கக் கூடாது. மாறாக சேவையின் உணர்வு, தூய மற்றும் விசுவாசத்தின் முன்மாதிரியை நிலைநாட்டக் கூடியதாகவும் நிலைநாட்டச் செய்யக் கூடியதாகவும் இருக்க வேண்டும். *ஸெய்யிதுல் கவ்மி காயிமுகும்* – சமுதாயத்தின் தலைவன் அதன் தொண்டன் ஆவான். சமுதாயத்தின் தலைவன் அதன் தொண்டன் ஆவான் என்பது எப்போதும் கண்முன் நிற்க வேண்டும். பொறுப்பாளர்களின் முன்மாதிரி ஜமாஅத்தினர்களை நன்மையில் நிலைபெறச் செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். சொல்லும் செயலும் சுயமாக முரண்பட்டிருந்தால் பிறகு மற்றவர்களுக்கு என்ன அறிவுரை வழங்க முடியும்? எந்த முகத்தைக்கொண்டு அறிவு வழங்க முடியும்? பிறகு மற்றவர்கள், முகத்தில் அடித்தவாறு, முதலில் உமது தவறுகளை சரி செய்யுங்கள். உங்களது நாவை ஒழுங்குபடுத்துங்கள். உங்கனது ஒழுக்கங்களை சிறப்பானதாக ஆக்குங்கள். உங்களது மார்க்க நிலையை சரிசெய்யுங்கள். உங்களது ஆன்மீக நிலைமைகளை சிறப்பானதாக ஆக்க முயற்சி செய்யுங்கள். உங்களது தொழுகைகளை சரிசெய்யுங்கள். உங்களது உலக விசயங்களிலும் நீதியை நிலைநாட்டுங்கள். உங்களது நம்பிக்கையின் தரத்தை உயர்த்துங்கள் என்று கூறுவார்கள். ஜமாஅத்தின் தூதுச் செய்தியை உலகத்திற்கு எட்ட வைப்பதற்கு தனக்குள் ஒரு வேதனையை ஏற்படுத்த வேண்டும். இது ஒவ்வொரு பொறுப்பாளரின் பொறுப்பாகும். **மார்க்க தர்பிய்யத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள முரப்பிகள் காலத்தின் கலீஃபாவின் பிரதிநிதிகளாவர்.** முரப்பிகளுக்கு கண்ணியம் அளியுங்கள். முரப்பிகளுக்கு கண்ணியம் அளிப்பது பொறுப்பாளர்களின் மிகப்பெரிய பணியாகும்.

அக மற்றும் புற நிலைகளை இஸ்லாமிய போதனைகளின்படி அமைத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் நீங்கள் நன்மையில் நிலைபெறக்கூடியவர்கள்; தீமையிலிருந்து தடுக்க உரிமை கொண்டவர்கள் எனக் கூற முடியும். எனவே இந்த வகையில் ஜமாஅத்தின் ஒவ்வொரு தரத்திலும் ஒவ்வொரு பொறுப்பாளரும் தன்னை ஆராய வேண்டிய அவசியம் உள்ளது. குறிப்பாக ஜமாஅத் தலைவர்களும், ஜமாஅத் அமீர்மார்களும் தன்னை ஆராய வேண்டும். இல்லையென்றால் இவர்கள் ஜமாஅத்தில் பிளவு ஏற்படுவதற்கு

காரணமாக அமைகின்றார்கள் என்பதாகும். முரப்பிகளுக்கும், முபல்லிக்குகளுக்கும் அதிக அளவு கண்ணியத்தை ஜமாஅத் தலைவர்களும், ஜமாஅத் அமீர்களும் தான் கொடுக்க வேண்டும். இந்த கண்ணியத்தை முரப்பிகள் தமது உரிமையாக கருதக் கூடாது. மாறாக இதன் மூலம் அதிக அளவு தன்னடக்கம் ஏற்பட வேண்டும். மேலும் அதிக அளவு தமது நஃப்ஸை சீர்திருத்துவதன் பக்கம் கவனம் ஏற்பட வேண்டும். நாம் ஒவ்வொரு நிலையிலும் இந்த தரத்தை அடைந்தோம் என்றால், பிறகு இன்சா அல்லாஹ் ஜமாஅத்தின் தர்பிய்யத் தொடர்பான பிரச்சனைகளும் தீர்ந்து விடும். தப்லீக் மைதானத்திலும் வழக்கத்திற்கு மாற்றமான வெற்றிகளைப் பார்ப்போம். இந்த ஒற்றுமை, ஒருமைப்பாடு, பிணைப்பு ஆகியவை நமது ஒவ்வொரு பணியிலும் அருளை ஏற்படுத்தும்.

நான் இன்னொன்றையும் தெளிவுபடுத்தி விடுகின்றேன். பொறுப்பாளர்களின் பரஸ்பர நடைமுறைகளும், செயல்பாடுகளும் நல்ல முறையிலும் தரம் வாய்ந்ததாகவும் இருக்க வேண்டும். இதுவும் மிகவும் அவசியமானதாகும். பணிகளில் அருள் ஏற்படுவதற்கு இது மிகவும் அவசியமானதாகும். பிரிவுகள் ஏற்பட்டு பரஸ்பரம் பிளவுகள் ஏற்பட்டுக் கொண்டே சென்றால், மரியாதை பற்றிய கேள்வி எழுந்து கொண்டே சென்றால், பொறுமையும், மன உறுதியும் குறைந்து கொண்டே சென்றால் பிறகு முடிவு எதிர்மறையாகத்தான் இருக்கும். முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இவ்வசனத்தின் விளக்க உரையில் ஒரு சம்பவத்தைக் கூறியுள்ளார்கள்.

ஒரு தலைவர் இருந்தார். அவரிடம் ஒருவர், என்னை அந்த பணக்காரர் ஏசினார் என்று புகார் செய்தார். அந்த தலைவர் அந்த பணக்காரரை அழைத்து, அவரை மிகவும் மோசமாக ஏசிப் பேசினார். அவர் அமைதியாக கேட்டுக் கொண்டே இருந்தார். அதன் பிறகு அந்த தலைவர் அவரிடம், நீர் ஏன் இந்த நபரை ஏசினீர்? எனக் கேட்டார். அதற்கு அந்த பணக்காரர் இவர் என்னை முதலில் ஏசிப்பேசினார். அதனை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால் தான் நான் அவரை ஏசினேன் என்றார். அந்த தலைவர் அவரிடம், நான் உங்களை ஏசினேன். நீங்கள் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தீர்கள். இதன்படி உங்களிடம் பொறுமை இல்லை என்பது கிடையாது. உங்களிடம் பொறுமை இருந்தது. அதனால் தான் எனது ஏச்சுக்களைக் கேட்டுக் கொண்டிருந்தீர். அவர் உம்மை விட கீழானவர் என நீர் எண்ணியதால் தான் நீர், அவரை ஏசிப் பேசியுள்ளீர். நீர் பொறுமை மேற்கொண்டிருந்தீர் என்றால் உம்மால் பொறுமையை மேற்கொள்ள முடியும். ஏனென்றால் நீர் என் முன்னால் பொறுமையை மேற்கொண்டீர். அதனைத் தான் நான் சோதித்துப் பார்த்தேன் என்றான்.

எனவே இதுதான் பொறுமையை மேற்கொள்ளக்கூடிய தரம் ஆகும். தன்னை விட உயர்வான மனிதரிடம், ஆற்றல் வாய்ந்த மனிதரிடம் நாம் எவ்வாறு பொறுமையை மேற்கொள்வோமோ, அதேபோல் பலவீனமான, அல்லது தமக்கு எதிரான மனிதரிடமும் அவ்வாறு பொறுமையை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் எல்லா விதமான கூச்சல் குழப்பங்களையும் தீர்க்க முடியும்.

உலகிற்கு நாம் அறிவுரை வழங்குகின்றோம்; இஸ்லாத்தின் அழகிய போதனையை எடுத்துரைக்கின்றோம். ஆனால் நேரம் வரும்போது நம்மில் பெரும்பான்மையினர் பொறுமையை கைவிட்டு விடுகின்றோம். நாம் இந்த தரத்தை அடைந்தோம் என்றால் பிறகு நமது தப்லீகின் மைதானம் இன்னும் அதிகமாக திறந்து கொண்டே செல்லும். பொதுவான ஜமாஅத் உறுப்பினர்கள் இவை அனைத்தும் வாழ்வை அர்ப்பணித்தவர்கள் மற்றும் பொறுப்பாளர்களின் பொறுப்பாகும் என நினைக்க வேண்டாம். பரஸ்பரம் அன்பு மற்றும் நேசத்தினை அதிகப்படுத்துவது, சாந்தி சமாதானத்தை நிலைநிறுத்துவது, அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாகப் பற்றிப் பிடிப்பது, அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களது கூற்றுக்களை கேட்பது, அதன்படி செயல்படுவது, ஹஸ்ரத மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய போதனைகளின்படி இறையச்சத்தின் தரத்தை உயர்த்துவது, காலத்தின் கலீஃபாவுடைய கூற்றிற்கு லப்பைக் என்று கூறுவது இவைகள் ஒவ்வொரு அஹ்மதியின் பொறுப்பாகும். இந்த விசயம்தான் ஜமாஅத்தில் ஒற்றுமையை நிலைநிறுத்தச் செய்யும். பொறுப்பாளர்களுக்கு மதிப்பும், மரியாதையும் கொடுப்பது, ஜமாஅத் விசயங்களில் அவர்களுக்கு கட்டுப்படுவது ஒவ்வொரு ஜமாஅத் உறுப்பினர் மீதும் கடமையாகும். பரஸ்பரம் உள்ள தொடர்பில் அது வீடாக இருந்தாலும், வெளியில் இருந்தாலும் உயர் நல்லொழுக்கத்தை நிலைநாட்டுவது ஒவ்வொரு அஹ்மதியின் பொறுப்பாகும். அப்போதுதான் நெருப்புக் கிடங்கில் விழுவதிலிருந்து காப்பாற்றப்படுவார். பிறகு இறைவன் தப்லீக் பணிகள் முபல்லிக்குகளுடையது மட்டும் தான் என்று கூறவில்லை. அல்லது தஃவத்தே இலல்லாஹ்வுக்காக தனது

பெயரைக் கொடுப்பவர்களுடைய பணியாகும் என்று கூறவில்லை. அல்லாஹ் குறிப்பாக ஒரு கூட்டத்தினரைத்தான் கூறியுள்ளான். இருந்தபோதிலும், தஃவத்தே இலல்லாஹ் பற்றி பொதுவன கட்டளையும் உள்ளது. நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய ஒவ்வொரு கட்டளையின்படி செயல்படுவது மற்றும் அன்னாரின் முன்மாதிரியின்படி நடப்பதற்கும் அல்லாஹ் கூறியுள்ளான். எனவே, தப்லீக் பணியிலும் அன்னாரைப் பின்பற்ற வேண்டும்.

நான் ஓதிய சூரா நஹ்லின் வசனத்தில் அல்லாஹ் இதனைத்தான் கூறுகின்றான். பொறுப்புகளை நம்மீது சுமத்தியிருக்கின்றான். ஒவ்வொரு முரப்பிக்கும், ஒவ்வொரு பொறுப்பாளருக்கும் ஜமாஅத் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இறைவழியில் மக்களை அழைக்க வேண்டும் என்ற ஒரே பொறுப்பு தான் உள்ளது. பிறகு அழைக்கக்கூடிய வழியினையும் கற்றுக் கொடுத்துள்ளான். ஹிக்மத்துடன் இறைவழியில் அழையுங்கள் என்று கூறுகின்றான்.

உங்களைப் பற்றிய அறிமுகம் உலகில் பரவுகிறது. மக்கள் உங்கள் மீதும் கவனம் செலுத்துகிறார்கள். பள்ளிவாசல் திறந்த பிறகு தப்லீகிற்கான வழிகள் மேலும் திறக்கின்றன. செய்தித்தாள்களும் இதனைப் பற்றி எழுத ஆரம்பித்துள்ளது. இதிலிருந்து பயன் அடைந்தவாறு தப்லீகின் ஹிக்மத்தை உணர்ந்து பிறகு இந்த கடமையை நிறைவேற்றுங்கள். இதனைத் தான் அல்லாஹ் கூறுகின்றான்.

அல்லாஹ் தப்லீகிற்காக ஹிக்மத் என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளான். இதற்கு பல பொருள்கள் உள்ளன. பல்வேறு நிலைகளில் பல்வேறு மக்களுக்காக அவர்களிடம் நீங்கள் எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும் என அல்லாஹ் கவனமூட்டியுள்ளான். முதல் விசயம், மார்க்க அறிவைப் பெறுவது மிகவும் அவசியமாகும். அது திருக்குர்ஆனை ஓதுவது, அதன் விளக்கங்களை படிப்பதன் மூலம் கிடைக்கப்பெறும்.

உங்களது ஆதாரங்களை உறுதிப்படுத்த வேண்டும். மேலும் விளக்கங்கள் கொடுக்கப்பட்ட சில விசயங்கள், ஹதீஸ்களில் நபி (ஸல்) அவர்களுடைய கூற்றுகள் போன்றவற்றின் மூலம் ஆதாரங்களை வலுப்படுத்த வேண்டும். இஸ்லாத்தின் மீதும், நபி (ஸல்) அவர்கள் மீதும் சில ஆட்சேபனைகள் செய்யப்பட்டு வருகின்றன. அதனைப் பற்றி உறுதியான சான்றுகளைக் கையாள வேண்டும். அதனைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். பிறகு ஹிக்மத் என்பதற்கு அத்ல் அதாவது நீதி என்றும் பொருள் உள்ளது. விவாதத்தின் போது ஆட்சேபனைக்குரிய கருத்துகளையும் சான்றுகளையும் ஒருபோதும் எடுத்து வைக்கக் கூடாது. இதற்குப் பதிலாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒரு முஸ்லிமிடமிருந்து நீதியின் எதிர்பார்ப்புகள் நிறைவேற வேண்டும். நல்ல விளைவை ஏற்படுத்துவதற்குப் பதிலாக தீய விளைவை ஏற்படுத்தக்கூடிய விசயங்களைப் பேசக் கூடாது. அஹ்மதி அல்லாதவர்களை நாம் பார்க்கின்றோம். அறிவுப்பூர்வமாகப் பேச முடியாமல் தோற்றுப்போகும் நிலை ஏற்படும் போது உடனே ஏச்சுப் பேச்சுகளைப் பேச ஆரம்வித்து விடுவார்கள். இறைவனது கலாமின் ஹிக்மத்தை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக அவர்களுடைய அசுத்தத்தை வெளிப்படுத்தும் விசயங்களைப் பேச ஆரம்பித்து விடுவார்கள்.

நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது எழுத்தறிவு மற்றும் பேச்சறிவு ஆகியவற்றின் மூலம் தர்பிய்யத் வழங்கி இருக்கிறார்கள். எனவே தப்லீக் சமயத்தில் நமது எந்த கூற்றின் மூலமும் அநீதி, நேர்மையின்மை போன்றவை வெளிப்படவே முடியாது. எனவே, ஹிக்மத்துடன் தப்லீக் செய்வதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல்களைப் படிப்பது அவசியமாகும். இது தப்லீக் பணியில் பயன் தருவது மட்டுமின்றி ஒவ்வொரு அஹ்மதியின் தர்பிய்யத்திலும் ஓர் அங்கமாக செயல்படும். இதனைப் போன்று ஹிக்மத்திற்கு மென்மை, சகிப்புத்தன்மை என்ற பொருளும் உள்ளது. இதில் பொறுமையும் உள்ளடங்கும். தப்லீகில் பொறுமை மிகவும் அவசியமான ஒன்றாகும். புதிதாக வரக்கூடியவர்கள் தமது சொந்தபந்தங்களுக்கு எவ்வாறு தப்லீக் செய்ய வேண்டும்? என குறிப்பாக கேட்கின்றனர். சில நெருக்கமானவர்களுக்காக அவர்களது உள்ளங்களில் வேதனை இருக்கும். அவர்களிடம் ஒரு நிம்மதியற்ற நிலை காணப்படும். குறிப்பாக அவர்கள் தமது அன்பர்களிடம் அஹ்மதிய்யத்தைப் பற்றி கூறும்போது, அவர்கள் இவர்களது பேச்சைக் கேட்பதற்குப் பதிலாக கோபமடைந்து விடுவார்கள். மிகவும் கடுமையாகப் பேசுவார்கள். அப்போது ஒவ்வொரு அஹ்மதியின் பணி என்னவென்றால் மென்மை மற்றும் பொறுமையை வெளிப்படுத்த வேண்டும். இதுவே ஹிக்மத் ஆகும். இது மிகவும் அவசியமான ஒன்றாகும். பலருடைய உள்ளம் ஹிக்மத் மூலமாக மென்மையாகி விடுகின்றது.

பொறுமை மற்றும் மென்மை காட்டுவதினால் மென்மையாகி விடுகிறது. பலர் தனது சம்பவங்களை எழுதுகின்றனர். எங்களது பொறுமை மற்றும் மன உறுதி மூலம் எங்களால் சகிக்க முடியாது என தோன்றியது. ஆனால் நாங்கள் பொறுமையை மேற்கொண்டோம். எங்களது பொறுமை கனிகளைத் தந்தது. எங்களது இன்ன நண்பர் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டார் என எழுதுகின்றனர்.

பிறகு திருக்குர்ஆனில் வந்துள்ள ஹிக்மத் என்பதற்கு அகராதியில் இவ்வாறும் பொருள் உள்ளது. அதாவது அறிவீனத்திலிருந்து தடுக்கும் என்று பொருள். அதாவது தப்லீக் செய்யக் கூடியவர் மற்றவர்கள் அறிவீனத்தின் கூற்றுக்களைக் கூறுவதிலிருந்து தடுக்கக்கூடிய விசயங்களைப் பேச வேண்டும். மற்றவரது தன்மையை அறிந்து பேச வேண்டும். உங்களுடைய கூற்று மற்றவரை மேலும் அதிகமாக அறிவீனமான பேச்சுக்களைப் பேசுவதற்குக் காரணமாக அமையக் கூடாது.

மவ்லவிகளின் கூட்டம் அல்லது உள்ளம் கடினமானவர்களின் கூட்டம், அல்லாஹ்வின் தக்தீரும் அவர்களுக்கு அறிவீனமான மரணத்தையே நிர்ணயித்துள்ளது. இப்படிப்பட்டவர்களைத் தவிர மற்றவர்களிடம் ஹிக்மத்துடன் ஒருவருடைய தன்மையையும் அறிவுத் திறனையும் புரிந்தவாறு பேசினோம் என்றால் அங்கு உள்ளம் மென்மை அடைய ஆரம்பித்து விடும். ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும் குறைந்தபட்சம் அமைதியாகி விடுவார். இன்னும் இறை இருப்பை மறுக்கக் கூடியவர்களின் மார்க்கத்திற்கு எதிராக இருக்கக்கூடியவர்களின் உள்ளம் கூட மென்மை அடைய ஆரம்பித்து விடுகின்றது. அவர்களும் தவறான, அறிவீனமான ஆட்சேபனைகளை வைப்பதிலிருந்து தவிர்ந்து விடுகின்றார்கள்.

நான் கூறியதுபோன்று, வரவேற்பு நிகழ்ச்சியின் உதாரணத்தைக் கூறுகின்றேன். அதில் வந்திருந்தவர்களில் மதச்சார்பற்றவர்கள் பலர் இருந்தனர். அவர்களில் ஒரு கூட்டம் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸின் ஒளியில் விசயங்களைக் கேட்டதும், அவர்கள் மார்க்கத்தின் விசயம் உள்ளத்தில் எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், அதனைக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என உள்ளம் விரும்புகிறது என்றனர். அவர்கள் என்னை சந்திக்கவும் செய்தனர்.

எனவே இஸ்லாமிய போதனைகள் எந்த அளவு ஹிக்மத் நிறைந்த போதனைகள் என்றால், சூழ்நிலைக்கேற்ப உலகின் முன் எடுத்து வைத்தோம் என்றால் அது உள்ளத்தில் நல்ல விளைவை ஏற்படுத்துகிறது.

நான் மீண்டும் கூறுகின்றேன். தற்போது மைதானம் நமக்காக தயாராக உள்ளது. அறிமுகம் நன்கு ஏற்பட்டு விட்டது. இந்த நிலையை நீங்கள் தான் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். தக்க வைத்துக் கொள்வது உங்களில் ஒவ்வொருவருடைய பணியாகும்.

பிறகு ஹிக்மத் ஒருபோதும் தவறாக பேசக்கூடாது என எதிர்பார்க்கிறது. உண்மை மற்றும் தூய வார்த்தை பேச வேண்டும். இஸ்லாம் அழகிய மற்றும் உண்மையான மார்க்கமாகும். அதற்கு ஒளிவு மறைவாகப் பேச வேண்டிய அவசியமே இல்லை. நாம் ஹிக்மத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்காக பொய் கூற நேரிட்டாலும் கூறுங்கள் எனக் கூறக்கூடிய ஆலிம்களைப் போன்று கிடையாது. இவை அவர்களது தப்ஸீர்களின் நூல்களில் எழுதப்பட்டுள்ளது. பொய் கூறப்பட்ட ஹிக்மத் எப்படி ஹிக்மத் ஆகும். எங்கு பொய் கூறப்பட்டதோ அங்கு நீதி, நேர்மை அழிந்து விட்டது. எங்கு இந்த விசயங்கள் அழிந்தனவோ அங்கு கூச்சலும் குழப்பமும் தான் ஏற்படுகின்றது. இதுதான் இன்று பாகிஸ்தானிலும் ஏனைய இஸ்லாமிய நாடுகளிலும் நாம் பார்க்கின்றோம். குழப்பம் ஏற்பட்டு விட்டதென்றால் பிறகு அங்கு இஸ்லாம் இருப்பதில்லை. எனவே இஸ்லாத்தின் உண்மையான போதனையினை ஒருவர் பரப்ப முடியும் என்றால், ஒருவரால் கூற முடியும் என்றால், அஹ்மதியால் மட்டும் தான் கூற முடியும். அவர்களது ஒவ்வொரு கூற்றும் உண்மை, நீதி மற்றும் அறிவினைச் சார்ந்துள்ளது. ஒவ்வொரு அஹ்மதி மீதும் மாபெரும் பொறுப்பு உள்ளது. அதனை நாம் நிறைவேற்ற வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்: இவ்வாறு ஹிக்மத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுங்கள். அதாவது அறிவைப் பெறுவதற்கு பொறுமையின் தரத்தை உயர்த்துங்கள். நீதியின் தரத்தை உயர்த்துங்கள். தினசரி வாழ்வில் இதனை செய்யுங்கள். தமக்குள் மக்களின் இயல்பை உணரும் ஆற்றலை வளர்க்க வேண்டும்.

ஏனென்றால் **மக்களின் இயல்பை உணராமல் தப்லீக் செய்ய முடியாது. இயல்பை உணர்வது தப்லீக் பணியில் மிகவும் முக்கிய வழிமுறையாகும்.** அவ்வாறு செய்தால் உங்களது அறிவுரை மிகவும் உயர்ந்ததாக இருக்கும். உங்களது தப்லீக் ஹிக்மத் நிறைந்ததாக இருக்கும். அப்போதுதான் நீங்கள் அழகிய அறிவுரைகளின்படி அமல் செய்யக்கூடியவர் ஆவீர்கள். அழகிய அறிவுரை என்பதன் பொருள் உள்ளத்தை மென்மையாக்கக் கூடியது என்பதாகும். ஹிக்மத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றியவாறு எந்த விசயம் இருக்குமோ அது உள்ளத்தை மென்மையாக்குகின்றது.

இங்கு பல்வேறு சமுதாயங்கள் வாழ்ந்து வருகின்றன. அவர்களுக்காக பல்வேறு வழிகளில் சிந்திக்க வேண்டும். எவ்வாறு அவர்களுக்கு அழகிய முறையில் தப்லீக் செய்ய முடியும் என்பதை சிந்திக்க வேண்டும். அதன் பக்கமும் அல்லாஹ் வழிகாட்டியுள்ளான். அதாவது,

جَادِلْهُمْ بِالَّتِي هِيَ أَحْسَنُ

அதாவது, தப்லீக் சிறந்த ஆதாரம் மற்றும் ஹிக்மத்துடன் எப்படி இருக்க வேண்டும் என்றால், உங்களது அறிவுரை உள்ளத்தில் எப்படி தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும் என்றால், உள்ளம் மென்மை அடைய ஆரம்பிக்க வேண்டும். தப்லீக் பணியில் ஈடுபடுவது ஒவ்வொரு அஹ்மதியின் பணியாகும். பிறகு இதில் கனிகளை ஏற்படுத்துவது இறைவனின் வேலையாகும். நேர்வழியினைக் காட்டுவது இறைவனின் வேலையாகும். ஆனால் நான் ஆரம்பத்தில் கூறியது போன்று இந்தப் பணிக்காக நாம் நமது நிலைகளை மாற்றுவது மிகவும் முக்கியமானதாகும். அப்போதுதான் நமது கருத்து, விளைவை ஏற்படுத்தும். அப்போதுதான் ஆதாரங்கள் பயனளிக்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் அறிவுரை கூறக்கூடிய வழிகளின் பக்கம் கவனமூட்டியவாறு கூறினார்கள். யாருக்கு அறிவுரை வழங்க வேண்டுமோ அவருக்கு நாவினால் அறிவுரை கூறுங்கள். விசயம் ஒன்றுதான் இருக்கும். அதனை ஒரு கோணத்தில் உபயோகிப்பதன் மூலம் ஒருவரை பகைவராக்க முடியும். மற்றொரு கோணத்தில் கூறுவதன் மூலம் நண்பனாக்கி விடும்.

எனவே, *ஜாதில்ஹுூம் பில்லத்தி ஹிய அஹ்ஸன்* என்பதற்கேற்ப செயல்படுங்கள். இவ்வாறு பேசும் வழிமுறையைத் தான் இறைவன் ஹிக்மத் என்று கூறியுள்ளான். எனவே ஹிக்மத்துடன் பேசுவது பரஸ்பரமும் அவசியமாகும். தப்லீகிற்கும் அவசியமாகும். தர்பிய்யத்திற்கும் அவசியமாகும். உலகினை இறைவன் பால் அழைப்பதற்கும் அவசியமாகும்.

அல்லாஹ் தனது அருளால் தப்லீகின் வழிகளைத் திறந்துள்ளான். இதிலிருந்து பலன் பெறுவது, ஒன்றுபட்டு ஒருமுகமாக தப்லீக் மைதானத்தில் இறங்குவது ஜமாஅத் உறுப்பினர்களின் வேலையாகும். இதனை எவ்வாறு செயல்படுத்துகின்றீர்கள் என்பது உங்களைத் தான் சார்ந்துள்ளது. பள்ளிவாசல் தொடர்பாக இஸ்லாம் தனது செடியை நட்டி விட்டது என செய்தித்தாள்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. மேலும் கலீஃபா அவர்கள் 17-ம் நூற்றாண்டில் முஸ்லிம்கள் இங்கிருந்து வெளியேற்றப் பட்டார்கள். நாம் திரும்ப கொண்டு வர வேண்டும் எனக் கூறியுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இந்த செய்திகள் மூலம் மட்டும் நமக்கு நமது நோக்கம் கிடைக்கப் பெறாது. இதனைப் போன்ற ஒத்துள்ள செய்திகளை நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் பெட்ரோபாதில் பசாரத் பள்ளிவாசல் திறந்தபோதும் வெளியிட்டது. ஆனால் ஆராய்ந்து பாருங்கள். கடந்த 30 வருடங்களில் நாம் ஏதாவது பெற்றிருக்கிறோமா?

எனவே முன்னேற்றம் அடையக்கூடிய சமுதாயங்கள் பத்திரிகை செய்தியால் மட்டும் மகிழ்ச்சி அடையாது. நோக்கத்தினை அடையக் கூடிய சமுதாயங்கள், வரவேற்பு நிகழ்ச்சியில் அல்லது நண்பர்களின் கூட்டத்தில் விருந்தினர்களின் உணர்வைக் கண்டு மகிழ்ச்சி அடையாது. மாறாக தன்னை ஆராய்ந்து பார்க்கும். புதிய புதிய திட்டங்களைத் தீட்டும். பரஸ்பரம் ஒன்றிணைந்து புதிய உறுதிப்பாட்டுடன் தனது நிகழ்ச்சிகளை செயல்படுத்தும். மேலும் தனது நோக்கத்தினை அடையும் வரை அது நிம்மதியாகவே இருக்காது.

சின்னச் சின்ன விசயங்கள் அவர்களுக்கு முன்பு எந்த அந்தஸ்தையும் பெறுவதில்லை. அமீர் ஜமாஅத் அல்லது சதர் ஜமாஅத் என்னைப் பற்றி என்ன கூறினார்கள்? என்ற எதிர்பார்ப்பு அவர்களிடம் இருக்காது.

மாறாக, இப்படிப்பட்ட விசயங்களை எட்ட வைப்பவர்களிடம் முன்னேற்றம் அடையக்கூடிய மக்கள் இந்த சின்னச் சின்ன விசயங்களுக்கு என் முன்னால் எந்த அந்தஸ்தும் இல்லை எனக் கூறுவார்கள்.

நான் காலத்தின் இமாமிடம் பைஅத் செய்துள்ளேன். அதனை நான் நிறைவேற்ற வேண்டும். உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். இந்த சிறிய விசயங்களின் பக்கம் கவனம் செலுத்துவது எனது சிந்தனையை சிதறடித்து விடும். இதனால் நான் எனது நோக்கத்தை மறந்து விடுவேன். எனது நாட்டைச் சார்ந்தவர்களை ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களது கொடியின் கீழ் கொண்டு வருவதில் இந்த பரஸ்பர காழ்ப்புணர்ச்சிகள் தடையாக அமைந்து விடும். பிறகு என்னிடமிருந்து பிளவுகள் வெளிப்படும். இவ்வாறு நான் எனது இம்மையையும் மறுமையையும் சீரழிக்கக் கூடியவனாக ஆகி விடுவேன். உங்களுக்கு என் மீதும், ஜமாஅத்தின் மீதும் அனுதாபம் உள்ளதென்றால் பிறகு இப்படிப்பட்ட விசயங்களை என்னிடம் கொண்டு வராதீர்கள். எந்த நபரைப் பற்றிய விசயங்களை நீங்கள் கேள்விப்பட்டாலும் என்னிடம் கூறாதீர்கள். ஏனென்றால் இது புறம் பேசுவதாகும் என்று இவர்கள் கூறி விடுவார்கள்.

ஒவ்வொரு அஹ்மதிக்கும், ஒவ்வொரு முப்பலிக்கிற்கும், ஒவ்வொரு பொறுப்பாளருக்கும் இந்த சிந்தனை இருக்கும் என்றால் பிறகு இன்சா அல்லாஹ் புரட்சிக்கான வழிகள் திறந்து கொண்டே செல்லும். எனவே ஒவ்வொரு நிலையில் உள்ளவர்கள், அவர் காதிமாக இருந்தாலும் சரி, அன்ஸார் ஆக இருந்தாலும் சரி, லஜ்னாவின் உறுப்பினராக இருந்தாலும் சரி, **இஸ்லாத்தின் தலையை உயர்த்துவதற்காக எல்லா விதமான பிளவுகளையும் களைய வேண்டும். எல்லா விதமான மனக் கசப்புகளையும், துக்கங்களையும் குழப்பங்களையும் அடியோடு அழிக்க வேண்டும் என உறுதி கொள்ளுங்கள்.** அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான வாய்ப்பினை வழங்குவானாக! கடந்த ஜுமுஆவில் நான் பள்ளிவாசலில் இருக்கும் வசதியைப் பற்றிய எண்ணிக்கையை கூறினேன். டெக்னிக்கலாக கூறியது போன்று தான் உள்ளது. ஆனால் பல்வேறு அறைகள் உள்ளன. அவற்றில் மொத்தம் 600 பேர் வரை தொழலாம். அல்லாஹ் இந்தப் பள்ளிவாசலை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக்குவானாக!

★ ★ ★ ★ ★

JUMUA KHUTBA
HAZRATH KHALIFATUL MASIH V
at BAIT-UR-RAHMAN MOSQUE, Valencia, Spain.
on **05.04.2013**

Translated by : Maulavi N. ZIYAUL HAQ
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456